1st November 1962]

(*b*) the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது நடந்து கொண்டேயிருக்கிறது.

* 1037 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the State Housing Unit at Madurai has proposed to construct a number of flats in Madurai City under the Rental Housing Scheme ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Madurai Housing Unit of the State Housing Board has proposed to execute the following projects under the Rental Housing Scheme in Madurai City.

	Estimated Cost. (RUPEES IN LAKHS.)
1 Construction of 50 rental flats for the State Government's low-paid employees of the Ramanathapuram District at Madurai under the Union Government Rental Housing Scheme	5.00
2 Construction of 50 rental flats for the State Government's low-paid employees of Madurai District at Madurai under the Union Government Rental Housing Scheme	5.00
3 State Housing Scheme for Lower Middle Class (Rental) under State funds	1.00

திரு வை. சங்கரன் : இந்த விடுகள் கட்டுவதற்கான இடங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனவா என்ற அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : மதுரையில் அதற்கு வேண்டிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

** 1038 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) கிராம வீட்டு வசதித் திட்டம் ஒன்றை எற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

---

a Printed as Appendix V on page 442.

(இ) உண்டென்றால், அந்தத் திட்டம் எப்போது துவங்கப் படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) There is already a Scheme, namely, the Village Housing Projects' Scheme formulated by the Government of India, which is intended to benefit the villagers by grant of loans for the construction of houses in the selected villages in Block Development areas. The Scheme is under implementation. No other proposal is under consideration of the Government.

பாசனத்திற்கு உதவும் ஏரிகள்

* 1039 கேள்வி.—திரு. முனு ஆதி (திரு. எஸ். முருகையன் சார்பாக) : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சைதை தொகுதியிலுள்ள மைனர் நீர்ப்பாசன, மேஜர் நீர்ப் பாசன ஏரிகள் எத்தனை?

கனம் திரு. பூ. கக்கன் : பெரிய நீர்ப்பாசன ஏரி—26. சிறிய நீர்ப்பாசன ஏரி—140.

* 1040 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the details of amounts allotted for each district for minor irrigation works during the Third Plan period;

(b) the total number of Revenue tanks and P.W.D. tanks in each district; and

(c) the steps taken to complete the programme of renovation of the tanks during the Third Plan period?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] showing the particulars is placed on the Table of the House.

9-30 a.m. திரு. மீ. கலியாணசுந்தரம் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் திற்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை 8 கோடி ரூபாய். இரண்டு வருஷம் அநேகமாகப் பூர்த்தியாகக்கூடிய நேரத்தில் இருக் கிறோம். இந்த வேலை துரிதமாக நடைபெறவில்லை. அதனால் தான் சமீபத்தில் கூட மழை பெய்தபோது புதுக்கோட்டைப் பகுதியில் ரோடுகள் எல்லாம் உடைத்துக் கொண்டது. அதுபற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே டி.வி.ஆர். யூனிட்டை இன்னும் அதிகப்படுத்தியாவது இவ் வேலையைத் துரிதமாக நடைபெறச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த வருஷம் தான் அதிக மழை பெய்தது. அதனால் புதுக்கோட்டைப் பகுதி, மற்ற வறண்ட பகுதியில் உள்ள ஏரி குளங்கள் எல்லாம் நிரம்பி நன்றாக இருக்

[a] Printed as Appendix VI on pages 443–444.